**கவனிக்க.-** *2017.07.14 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II, *பகுதி* III *மற்றும் பகுதி* IV(*அ*) *ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2029 - 2017 ජූලි මස 21 වැනි සිකුරාදා - 2017.07.21

*2029 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |

| | பக்கம் |
|---|---|
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 90 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2017, ஓகத்து மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, யூலை மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

89- B81190-353(2017/07)

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின்
இல. : 4/10/38599
தென் மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : LC/14/LT/Am.Tho/5/518.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அம்பாந்தோட்டை மாவட்டம் அம்பலாந்தோட்ட பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குன்கம கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த குன்கம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளரினால் வரையப்பட்ட LC/AMB/2012/51 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் B எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 0.0506 ஹெக்டயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வதிவிடம் அமைக்கும் நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தருமாறு கேட்டுத் திரு. சமரசேகர விதானபத்திரகே தயாநந்த என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:-

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 763 மற்றும் காணித்துண்டு 758 இல் எப். வி. பி. 455 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 759 இல் எப். வி. பி. 455 ;
தெற்கு : தங்கலையிலிருந்து குன்கமவுக்கான வீதி;
மேற்கு : விஜயசூரிய மற்றும் S. W. P. சிரோமிக்கான வதிவிட காணி.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (1995.06.15 தொடக்கம் முன்னோக்கி)

**வருடாந்தக் குத்தகை** .- பிரதம மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 1995 ஆம் வருடத்திற்கான அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4 % வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்.

தண்டப்பணம்.- காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% இன் மும்மடங்கு தொகை தண்டப்பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வதிவிட நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப் படல் கூடாது.

(ஈ) பிரதேசச் செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்.

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்.

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

(எ) 5 வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் குடும்பத்தினுள் கைமாற்றம் செய்தல் அல்லது இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ்க் குத்தகைக்கு விடுதல் அல்லது கைமாற்றம் செய்வதற்கு அனுமதி யளிக்கப்படமாட்டாது.

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

கே. ஜீ. ஏ. கே. பழுகஸ்வேவ,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகெதமெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6 ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.
2017, யூலை 21.

7-484

காணி ஆணையாளர் நாயகத்தின்
இல.: 4/10/43325
தென் மாகாணக் காணி ஆணையாளரின்
இல.: LC/14/LT/LUNU/535.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அம்பாந்தோட்டை மாவட்டம் லுனுகம்வெகர பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ரனவரனவா கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ரனவரனவா எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளரினால் வரையப்பட்ட கடத்திரல் வரைபட இல. 830035 இல் புளக் இலக்கங்கள் 07 இன் 3 ஆம் இலக்க புளக்கின் காணித்துண்டு இலக்கம் 54 எனக் காட்டப்பட்டுள்ளதும் 20 பேர்ச் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வதிவிடம் அமைக்கும் நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தருமாறு கேட்டுத் திருமதி வட்டு டுரயலாகே மல்லிகா என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:-

வடக்கு : பாதை ;
கிழக்கு : பாதை ஒதுக்கு (பிரதான வீதி தனமல்விலயிலிருந்து திஸ்ஸ) ;
தெற்கு : விண்ணப்பதாரரின் வேளாண்மை பகுதி;
மேற்கு : விண்ணப்பதாரரின் வேளாண்மை பகுதி.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (1995.06.15 தொடக்கம் முன்னோக்கி)

**வருடாந்தக் குத்தகை** .- பிரதம மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 1995 ஆம் வருடத்திற்கான அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்.

தண்டப்பணம்.- காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% இன் மும்மடங்கு தொகை தண்டப்பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வதிவிட நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப் படல் கூடாது.

(ஈ) பிரதேசச் செயலாளர், மற்றும் வேறு நிறுவனங் களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனை கட்கும் இக்குத்தகை கட்டுப்படும்.

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்.

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

(எ) 5 வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் குடும்பத்தினுள் கைமாற்றம் செய்தல் அல்லது இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ் குத்தகைக்கு விடுதல் அல்லது கைமாற்றம் செய்வதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

கே. ஜீ. ஏ. கே. பழுகஸ்வேவ,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகெதமெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6 ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.
2017, யூலை 21.

07-485

காணி ஆணையாளர் நாயகத்தின்
இல. : 4/10/14865
மாகாணக்காணி ஆணையாளாரின்
இல. : பலாத்/இகோ/இ9/கல்/தீப.02

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

புத்தளம் மாவட்டம், கல்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவுக்கட்பட்ட இல. 605 A தளுவ மற்றும் இல. 603 சேதாபொல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பு/ கல்/2013/18 ஆம் இலக்க வரைபடத்தில் ஜீ. ஐ. எச் எனக் காட்டப்பட்டுள்ளதும் 64.832 ஹெக்டயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத் திற்காகக் குத்தகைக்கு தறுமாறு கேட்டு செயின்ட் ஏன்ஸ் சோல்ட் தளுவ (பிரைவட்) லிமிடட் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:-

வடக்கு : பாதை மற்றும் சதுப்புநிலக்காடு ;
கிழக்கு : பாதை ;
தெற்கு : பாதை ;
மேற்கு : பாதை.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** :- முப்பது (30) வருடங்கள் (2013.01.01 தொடக்கம்)

**வருடாந்தக் குத்தகை** :- பிரதம மதிப்பீட்டாளரின் மதிப்பீடு செய்யப்பட்ட 2017ஆம் வருடத்திற்காண காணியின் வர்த்தக பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். 1947 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க அரசகாணி கட்டளைச் சட்டத்தின் கீழ் குத்தகையின்அடிப்படையில் கையுதிர்க்கப்பட்டுள்ள வணிக நோக்கத்திலான காணிகளுக்கு குத்தகை சலுகை வழங்கும் 17/0390/738/005 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்திற்கு அமைவாக இக்குத்தகைப்பணம் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தி அமைக்கப்படும். ஆயினும், திருத்தியிமைக்கப்பட்ட குதுத்தகைப்பணம் முடிந்த ஐந்து வருடங்களின் இறுதியில் கொடுபட்ட தொகையிலும் பார்க்க 20% குறையாமல் இருக்க வேண்டும்.

தவணைப்பணம்.- முதலாவது தவணைப் பணம் செலுத்தப்பட்டுள்ளதனால் தவணைப் பணம் அறவிடல் இல்லை.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது.

(ஈ) பிரதேசச் செயலாளர், இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்.

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்ததகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஊ) 05 வருடகாலப்பகுதி பூர்த்தியாகும் வரையிலும், இந்தக் காணி குத்தகைக்குப் பெற்றுள்ள நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் அனுமதிக்கப்படமாட்டாது.

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

(ஐ) செயினட் ஏன்ஸ் சோல்ட் தளுவ (பிரைவட்) லிமிடட் நிறுவனத்திற்கு பாரிய பரிமாணக் கருத்திட்டம் குறித்து அரசகாணி, நீண்டகால குத்தகை அனுமதிப்பத்திரத்தின் கீழ் வழங்கப்படுவதால் கீழே காணப்படுகின்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டு அமைச்சரவை அங்கீகாரம் 2017.03.21 ஆந் திகதி கிடைக்கப்பெற்றுள்ளது.

(1) சுற்றாடல் முக்கியத்துவம் கொண்ட கண்டல் மற்றும் ஏனைய செடிகள் உள்ளடங்கியுள்ள தளுவ மற்றும் சேனபொல பிரதேசங்களை உள்ளடக்கிய கல்பிட்டிய பிரதேசச் செயலாளர் பிரிவில் இந்தக் கருத்திட்டத்திற்கான காணி அமைந்துள்ளதால், மீன் இனங்கள் மற்றும் நீரியல் வளங்களுக்கு எவ்வித தீங்கும் விளையாத வண்ணம் இந்த கருத்திட்டம் திட்டமிட்டு அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) களப்பிலுள்ள நீர் மாசடையாத மற்றும் கெடுதல் விளைவிக்காத வண்ணம், சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, உத்தேச கருத்திட்டம் திட்டமிட்டு அமைக்கப்படுதல் வேண்டும்.

(3) உத்தேச திட்டத்தினை ஆரம்பிக்க முன்னர், கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் வடமேற்கு மாகாணச் சுற்றாடல் அதிகாரசபை ஆகிய நிறுவனங்களிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(4) உணர்வு பூர்வச் சுற்றாடல் முறைமைக்கு அருகாமையில் உத்தேச காணி அமைந்துள்ளதால் சுற்றாடல் கற்கைகளின் தாக்கத்துக்கு உடப்பட்டு அங்கீகாரம் வழங்கப்படுதல் வேண்டும்.

4. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்ததமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கதக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

வை. வை. என். பெரேரா,
உதவிக் காணி ஆணையாளர்
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகதமெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6 ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.
2017, யுலை 21.

7-557

---

காணி ஆணையாளர் நாயகத்தின்
இல. : 4/10/16176-11
மாகாணக்காணி ஆணையாளாரின்
இல. : சிபிசி/எல்சி/எல்டி/4/1/32/580

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

நுவரெலியா மாவட்டம், நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 477ஏ, அம்பேவல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த அம்பேவல எனும் கிராமத்தில் அமைந்துள்ள நுவ /பிராளெ/ 2012/25 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் ஏ என காட்டப்பட்டுள்ள 01 ஏக்கர் 02 றூட் 03 பேர்ச்சஸ் விஸ்தீரமுள்ளதுமான அரச காணியை விவசாய நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தறுமாறு கேட்டு சிமாசஹித ரம்யா ஹொாடிகல்சர் (தனியார்) நிறுவனம் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணபிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : வீதி ;
கிழக்கு : 54B ஆம் இலக்க வன அளவை வரைபடத்தில் காணித் துண்டு இலக்கம் 163;
தெற்கு : 54B ஆம் இலக்க வன அளவை வரைபடத்தில் காணித் துண்டு இலக்கம் 163 மற்றும் 156;
மேற்கு : 54B ஆம் இலக்க வன அளவை வரைபடத்தில் காணித் துண்டு இலக்கம் 156 மற்றும் வீதி.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2017.06.02 தொடக்கம்)

**வருடாந்தக் குத்தகை** :- பிரதம மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2017 ஆம் வருடத்திற்கான காணியின் அபிவிருத்தி அடையாத பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப் பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருடங்களின் இறுதியில் கொடுபட்ட தொகையிலும் பார்க்க 50% அதிகமாகாமல் இருத்தல் வேண்டும்.

தவணைப்பணம் .- வருடாந்தக் குத்தகையின் மும்மடங்கு தொகை தவணைப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது.

(ஈ) பிரதேச செயலாளர், இலங்கை முதலீட்டுச சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்.

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்ததகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஊ) 2017.06.02 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருட காலப்பகுதி பூர்த்தியாகும் வரையிலும், இந்தக் காணி குத்தகைக்குப் பெற்றுள்ள நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் அனுமதிக்கப்படமாட்டாது

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

வை. வை. என். பெரேரா,
உதவிக் காணி ஆணையாளர்
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகெதமெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6 ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.
2017, யூலை 21.

7-558

---

காணி ஆணையாளர் நாயகத்தின்
இல.: 4/10/52198
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : பலாத்/இகோ/இ9/கல்/தீ.ப.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

புத்தளம் மாவட்டம் கற்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கந்தக்குளிய குடாவ (629 சி) கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கந்தக்குளிய குடாவ எனும் கிராமத்தில் அமைந்துள்ள பு/கல்/2016/31 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 'அ' இலக்கத்தைக் கொண்ட கடற்கோரை என அழைக்கப்படும் 2.4280 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை சுற்றுலாத்துறை நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தருமாறு கேட்டு கையிற்ஸ் சேர்ப்பிங் தனியார் (வ. து) விண்ணப்பித்துள்ளனர் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:-

வடக்கு : கடற்கரைக்காக ஒதுக்கப்பட்ட இடம் (கடற்கரை ஒதுக்கு);
கிழக்கு : கடல்கோரை தோட்டம் (அரச) ;
தெற்கு : பாதை ;
மேற்கு : கடல்கோரை தோட்டம் (அரச).

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** :- முப்பது (30) வருடங்கள் (2017.07.05 தொடக்கம்)

**வருடாந்தக் குத்தகை** :- பிரதம மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2017ஆம் வருடத்திற்காண காணியின் வர்த்தக பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தி அமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப்பணம் முடிந்த ஐந்து வருடங்களின் இறுதியில் கொடுபட்ட தொகையிலும் பார்க்க 20% அதிகமாகாமல் இருத்தல் வேண்டும்.

தவணைப்பணம்.- தவணைப் பணம் அறவிடல் இல்லை.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது.

(ஈ) பிரதேசச் செயலாளர், இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்.

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்ததகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஊ) 05 வருடகாலப்பகுதி பூர்த்தியாகும் வரையிலும், இந்தக் காணி குத்தகைக்குப் பெற்றுள்ள நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் அனுமதிக்கப்படமாட்டாது.

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

வை. வை. என். பெரேரா,
உதவிக் காணி ஆணையாளர்
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
“மிஹிகெதமெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6 ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.
2017, யூலை 21.

7-963

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.